தமிழ்நாடு அரசு

# இரண்டாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

### தொகுதி – 1

# தமிழ்
# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

2nd Std CBSE Tamil_Front Pages_Term_III.indd 1 22-10-2019 17:45:35

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2019

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

**விற்பனைக்கு அன்று**

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



2nd Std CBSE Tamil_Front Pages_Term_III.indd 2 22-10-2019 17:45:35

## முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!


உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



2nd Std CBSE Tamil_Front Pages_Term_III.indd 5 22-10-2019 17:45:37

# நம்பிக்கைக்குரிய ஆசிரியர்களே!









கடந்தகால கற்றலை அடித்தளமாகக்கொண்டு நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கேற்ற மொழித்திறன்களைக் குழந்தைகளிடம் வளர்க்கும் நோக்கில் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை கற்றுணர்ந்த அடிப்படை மொழித்திறன்களை நினைவுகூர்ந்து வெளிப்படுத்தும் வகையில் "என் நினைவில்" என்கிற தலைப்பில் ஆர்வமூட்டும் செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

மனமகிழ்வு,கற்பனை,தன்னம்பிக்கை, நற்பண்புகள், வாழ்வியல் திறன்கள் ஆகியவற்றைப் பெருகச்செய்யும் நோக்குடன் பாடல்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தெடுக்கும் வகையில் பல வடிவங்களில் பாடப்பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. விவரித்தல், பாடலுடன் கூடிய உரைநடை, குழந்தைகள் தாமே சொற்றொடர்களை உருவாக்கி மகிழும்படியான தொகுப்புப் படவடிவம், கதைகள், பட விளக்க அகராதி ஆகிய பாடப்பகுதிகள் இடம் பெற்றுள்ளன. குழந்தைகள் தாமே பாடப்பகுதிகளைப் படித்தறிந்து திறன்பெறும் வகையில், எளிய சொற்களைப் படிக்க வாய்ப்பளித்து மெல்ல மெல்ல சிறுசிறு சொற்றொடர்களைப் படிக்கும் நிலைக்கு இட்டுச்செல்லும் வகையில் பாடப்பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

செய்யுள் பகுதியில் ஓரடிச் செய்யுளான கொன்றை வேந்தன் எளிய விளக்கத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது.

சொற்கள், சிறுசிறு தொடர்கள் ஆகியவற்றைக் குழந்தைகள் தாமே சொந்த நடையில் பேச, எழுத விருப்புடன் முன்வரும் வகையிலும், உரையாடல் திறனை மேம்படுத்தும் வகையிலும் சொற்களஞ்சியத்தைப் பெருக்கும் வகையிலும் பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.











2nd Std CBSE Tamil_Front Pages_Term_III.indd 6 22-10-2019 17:45:43



















மொழித்திறனை மேம்படுத்தும் வகையில், அடிப்படை இலக்கணம் பாடப்பகுதியோடு இணைத்து மிக எளிமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியோடு கற்கும் வகையில் விளையாட்டு வடிவில் 'மொழியோடு விளையாடு' எனும் பகுதி கொடுக்கப்பட்டுள்ளது.

அன்றாடம் பயன்படுத்தும் பல சொற்களைத் தமிழில் அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தத் தூண்டும்விதமாக தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம் என்ற பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது

புதிர்களை விடுவிப்பதும் தேடிக் கண்டறிவதும் குழந்தைகளின் பெரு விருப்பங்களாகும். இவ்வியல்புகளைக் கற்றலுக்குப் பயன்படுத்தும் நோக்கிலும் இயற்கையை வியக்க, போற்ற, பாதுகாக்கத் தேவையான நுண்ணுணர்வுகளைப் பெற ஏதுவாகவும் பாடப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சொல்லிக்கொடுத்து திரும்பச் சொல்லவைக்கும் மனன முறையை விடுத்து, கலந்துரையாடவும், கேள்வி கேட்கவும், தருக்க முறையில் சிந்திக்கவும், சிந்தித்தவற்றை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் கருத்துகளையும் உணர்வுகளையும் உள்வாங்கி அவர்களை நெறிப்படுத்த இப்பகுதிகள் உதவும்.

குழந்தைகளின் பல்வேறு நுண்ணறிவுத் திறன்களைக் கருத்தில் கொண்டு அவர்கள் கற்கும் பாங்குகள், இயல்புகள், தேவைகள், விருப்பங்கள், ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்கும் வகையிலும் விழுமியங்கள், வாழ்வியல் திறன்களை வளர்க்கும் வகையிலும் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடநூல் உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கங்களை உணர்ந்து, குழந்தைகள் கற்றலில் ஈடுபட போதிய வாய்ப்பளித்து, மொழிப்பாடக் கற்றலை இனிமையான, பயன்மிக்க அனுபவமாக நிகழ்த்திக்காட்டும் பெரும்பொறுப்பு நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நமது பயணம் மிகப்பெரிது, மிக இனிது.
குழந்தைமையைக் கொண்டாடுவோம்!
வகுப்பறை வண்ணமயமாகட்டும்!

அன்புடன்,
ஆக்கியோர்.



2nd Std CBSE Tamil_Front Pages_Term_III.indd 7 22-10-2019 17:45:45



# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# உறுதிமொழி



இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# பொருளடக்கம்


| | பாடத்தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| | என் நினைவில் | 1 | சனவரி |
| 1 | யாரு? யாரு? யாரு? | 6 | சனவரி |
| 2 | சிறிய உருவம்! பெரிய உலகம்! | 9 | சனவரி |
| 3 | விரும்பி வேலை செய்யலாம் | 13 | பிப்ரவரி |
| 4 | நாங்கள் நண்பர்கள் | 16 | பிப்ரவரி |
| 5 | பயணம் | 20 | பிப்ரவரி |
| 6 | கடற்கரைக்குப் போகலாம் | 25 | பிப்ரவரி |
| 7 | தொடர்வண்டி நிலையத்தில் | 28 | மார்ச் |
| 8 | அன்றும் இன்றும் | 32 | மார்ச் |
| 9 | படவிளக்க அகராதி | 38 | மார்ச் |
| 10 | கொன்றை வேந்தன் | 40 | மார்ச் |
| | மொழியோடு விளையாடு | 41 | ஏப்ரல் |
| | தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம் | 42 | ஏப்ரல் |
| | வந்த பாதை | 43 | ஏப்ரல் |


QR GUIDE

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

உங்கள் திறன்பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

செயலியைத் திறந்தவுடன், Scan செய்யும் பொத்தானை அழுத்தி, பாடநூலில் உள்ள விரைவுக் குறியீடுகளை Scan செய்யவும்.

திரையில் தோன்றும் கேமராவைப் பாடநூலின் QR Code அருகில் கொண்டுசெல்லவும்.

Scan செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாடப்பகுதிகளைப் பயன்படுத்தலாம்.

குறிப்பு: இணையச் செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஓர் QR code Scanner ஐப் பயன்படுத்தவும்.



3G1NJN

மின் நூல்

4QCCLZ

மதிப்பீடு

B307_2_TAM_LANG_T1

இணைய வளங்கள்





2nd Std CBSE Tamil_Front Pages_Term_III.indd 9 22-10-2019 17:45:48

# தமிழ்

## இரண்டாம் வகுப்பு

### மூன்றாம் பருவம்



2nd Std CBSE Tamil_Front Pages_Term_III.indd 10 22-10-2019 17:45:48

# என் நினைவில்

## எப்படி உதவலாம்?



குட்டி எலி வெளியே வருவதற்கு இவற்றுள் எந்த வழியில் உதவலாம்? ✓ செய்க







வேறு எப்படி உதவலாம்? கலந்துரையாடுக

# விந்தை மனிதர்



பூசணிக்காய் தலையிலே
பச்சை மிளகாய் மூக்குதான்!
திராட்சை இரண்டு கண்களாம்
தக்காளிப்பழ வாய்தானாம்

பரங்கிக்காய் உடம்பிலே
புடலை இரண்டு கைகளாம்
வெண்டைக் காய்கள் விரல்களாம்
வெள்ளரிக்காய் கால்களாம்

காயும் பழமும் மனிதர்போல்
காண அழகு பாருங்கள்
நடனம் ஆடப் போகிறார்
நாமும் காண்போம் வாருங்கள்


**பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.**



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 2 21-10-2019 17:31:54

## பொருத்தமான சொல்லை எழுதுக

லட்டு, மரம், ரோஜா,
மலை, மேசை,
மிட்டாய், வளையல்,
முயல்




பர்வீன்,
ஜ, ஹ, ஷ, ஸ, ஸ்ரீ
ஆகிய வரிசை
எழுத்துகளைக்
கொண்ட தன்
நண்பர்களின் பெயரை
எழுதுகிறாள்.

ஹரீஷ்
ஸ்ரீதர்
ஆயிஷா
ஜுலி
விஜயா
ஜாஸ்மின்

நீங்களும்
எழுதலாமே!



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 3 21-10-2019 17:31:55

# யார் அவர்?


அம்மா.. நான் ஒருவரைப் பார்த்தேன்
யார் அவர்?
அவர் பாம்பைக் கையாலேயே பிடித்தார்
அப்படியா?
யானையையே வாலைப் பிடித்துத் தூக்கினார்
என்னது யானையையா?
புலியையே காலால் மிதித்தார்
உண்மையாகவா?









2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 5 21-10-2019 17:31:57






# 1. யாரு ? யாரு? யாரு?

AQUH21

கத்தரிக்காய்க்குக்
குடைபிடிக்கக்
கற்றுக்கொடுத்தது யாரு?

அந்தக் கடலைக்கொட்டைக்கு
முத்துச் சிப்பிபோல
மூடிவச்சது யாரு?

பருத்திச்செடிக்குப்
பஞ்சு மிட்டாயைத்
தின்னக்கொடுத்தது யாரு?

அந்த வாசனையில்லாக்
காகிதப் பூவுக்கு
வண்ணமடிச்சது யாரு?

ஆலமரத்துக்கு
அத்தனை ஊஞ்சலை
ஆடக்கொடுத்தது யாரு?

அந்தத் தொட்டாசிணுங்கி
பட்டுன்னு மூடிக்கக்
கட்டளை போட்டது யாரு?

யாரு? யாரு? கூறு
அந்த இயற்கை
அன்னையாம் பாரு




– வையம்பட்டி முத்துசாமி

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 6 21-10-2019 17:32:00

# பயிற்சி

## ஒலித்துப்பழகுக

கற்றுக்கொடுத்தது

மூடிவச்சது

தின்னக் கொடுத்தது

வண்ணமடிச்சது

ஆடக் கொடுத்தது

கட்டளை போட்டது

இயற்கை அன்னை

## படித்தும் எழுதியும் பழகுக

கத்தரிக்காய்

கடலைக்கொட்டை

முத்துச்சிப்பி

பருத்திச்செடி

பஞ்சுமிட்டாய்

காகிதப்பூ

தொட்டாசிணுங்கி

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | கத்தரிக்காய் | – | முத்துச்சிப்பி |
| 2. | கடலைக்கொட்டை | – | ஊஞ்சல் |
| 3. | பருத்திச்செடி | – | வண்ணம் |
| 4. | ஆலமரம் | – | பஞ்சுமிட்டாய் |
| 5. | காகிதப்பூ | – | குடை |

## கலந்துரையாடுக

இப்பாடலில் உனக்குப் பிடித்த வரிகள் எவை? ஏன் ?



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 7 21-10-2019 17:32:01

## நம்மைச் சுற்றி...



தூங்குமூஞ்சி மரத்தின் இலைகளைக் கவனித்திருக்கிறீர்களா? காலையிலும் மாலையிலும் எப்படி இருக்கும்?





பட்டாசுக்காயைத் தண்ணீரில் போட்டால் என்ன நடக்கும்?





சூரியகாந்திப்பூக்களைப் பார்த்திருக்கிறீர்களா? அனைத்தும் ஒரே திசையை நோக்கி இருக்கும்.



## பலமுறை சொல்லிப்பார். கிடைக்கும் சொல்லை எழுதுக.

| | |
|---|---|
| தரிகத் | |
| லைகட | |
| சல்ஊஞ் | |
| டைகு | |
| டாய்மிட் | |

SQYX2U

# 2. சிறிய உருவம்! பெரிய உலகம்!



"ஓ குட்டி எறும்பே!
உன்னைவிடப் பெரிய
அரிசியை எப்படித் தூக்கிச்
செல்கிறாய்?


அடடே! பார்த்துக்கொண்டு
இருக்கும்போதே உள்ளே
சென்றுவிட்டாயே!


நானும் உன்னைப்போல்
சிறியதாக இருந்தால்
உன்னுடனேயே
வந்திருப்பேனே,
என்றாள் கண்மணி.

சட்டென்று அவளுடைய
உடல் அதிர்ந்தது.

உருவம்
சிறியதாகிவிட்டது.

சுற்றிலும் பார்த்தாள்.
எறும்பின் அளவுக்குத்
தானும் சிறியதாகி
இருப்பதைக்கண்டு
வியப்படைந்தாள்.





எறும்பு நுழைந்த புற்றுக்குள் இறங்க
முயற்சி செய்தாள். தடுமாறினாள்.
பொத்தென்று புற்றுக்குள் விழுந்தாள்.

"இந்தப்புற்றுக்குள் இத்தனை
அறைகளா? எறும்புகளின் சேமிப்பைக்
கண்டாள். எறும்புப் புற்றுக்குள் அங்கும்
இங்கும் சென்று பார்த்தாள்.

வியப்பு குறையாமல் புற்றைவிட்டு
வெளியே வந்தாள். அருகிலிருந்த
மரத்தடியில் அமர்ந்தாள்.



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 9 21-10-2019 17:32:05

மரத்தின் மேலே ஒரு
தேன்கூடு இருந்தது,

"தேனீக்கள் எப்படி
கூடு கட்டுகின்றன?
தேனைச் சிந்தாமல்
எப்படிச் சேமிக்கின்றன?
அதையும்
பார்க்கவேண்டுமே"
என்று நினைத்தாள்.

உடனே அவளுக்குச்
சிறகுகள் முளைத்தன.




"ஊ ஊ ய்ய்" மகிழ்ச்சியில் கத்தினாள்.
பறந்து சென்று தேன்கூட்டுக்குள் புகுந்தாள்.



பலவகை தேனீக்களை
ஆர்வமாகப் பார்த்தாள்.

இவ்வளவு சிறிய தேனீ,
இத்தனை வேலைகள்
செய்கிறதா?
வியப்பு தாளவில்லை.

தேன்கூட்டைவிட்டு வரவே
மனமில்லை. தயங்கியபடியே
வெளியே வந்தாள்.



மரக்கிளையில் அமர்ந்தாள்.
கீழே அழகான நீரோடை.
அதில் மீன்கள் நீந்துவதைப்
பார்த்தாள்.

மீன்களைப் போல நீந்த
வேண்டுமென்று ஆசை
வந்தது.

அடுத்து என்ன நடந்திருக்கும்? கதையைத் தொடர்ந்து கூறுக.



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 10 21-10-2019 17:32:09

# பயிற்சி

## படித்துப்பழகுக

உடல் அதிர்ந்தது | மரத்தடியில்

தடுமாறினாள் | சட்டென்று | கத்திக்கொண்டு

வியந்தவாறு | தேனீக்கள்

## எழுதிப் பழகுக

எறும்புப்புற்று | தேன்கூடு

சிறகுகள் | மரக்கிளை | நீரோடை

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. எறும்புப்புற்று பெரியதாக வளர்ந்தது. ☐
2. கண்மணி எறும்பாக மாறிவிட்டாள். ☐
3. நீரோடையில் வாத்துகள் நீந்துவதைப் பார்த்தாள். ☐
4. நீரில் நீந்த வேண்டும் என்று கண்மணி நினைத்தாள். ☐
5. கண்மணி மரத்தடியில் அமர்ந்தாள். ☐

## வாய்மொழியாக விடை கூறு

1. கண்மணி எங்கெங்கே சென்றாள்? என்னவெல்லாம் பார்த்தாள்?
2. கண்மணிக்கு என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன?
3. கண்மணியைப் போல உனக்கு எங்கெல்லாம் சென்று பார்க்க ஆசை?

3XR8N3

## விடை எழுதுக

1. கண்மணி எங்கெங்கே சென்றாள்?



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 11 21-10-2019 17:32:10

## படங்களைத் தொடர்புப்படுத்திக் கதை உருவாக்குக








## கதையைக் கேட்டு முடிவை மாற்றிக் கூறுக






# 3. விரும்பி வேலை செய்யலாம்





வீட்டில் வேலை செய்யலாம்
விரும்பி நாமும் செய்யலாம்
படுக்கை சுருட்டி வைக்கலாம்
தரையைக் கூட்டிப் பெருக்கலாம்

உண்ணும் தட்டைக் கழுவலாம்
உடுத்தும் உடைகள் மடிக்கலாம்
கடையில் பொருள்கள் வாங்கலாம்
செடிகள் நட்டு வளர்க்கலாம்

இந்த வேலை பெரிதென
ஏற்றத்தாழ்வு இல்லையே!
எந்த வேலை ஆயினும்
எல்லாருமே செய்வோமே!

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.





2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 13 21-10-2019 17:32:16

# பயிற்சி

## ஒலித்துப்பழகுக

செய்யலாம் பெருக்கலாம்

கழுவலாம் மடிக்கலாம் வாங்கலாம்

வளர்க்கலாம் வைக்கலாம்

## படித்தும் எழுதியும் பழகுக

வீடு வேலை செடிகள்

தரை உடை கடை

தண்ணீர் படுக்கை ஏற்றத்தாழ்வு

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | படுக்கை | – | மடிக்கலாம் |
| 2. | உடுத்தும் உடைகள் | – | நட்டு வளர்க்கலாம் |
| 3. | கடையில் | – | சுருட்டி வைக்கலாம் |
| 4. | உண்ணும் தட்டை | – | பொருள்கள் வாங்கலாம் |
| 5. | செடிகள் | – | கழுவலாம் |

7CFAVD



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 14 21-10-2019 17:32:19

## இவர்களைத் தெரியுமா?

### விண்வெளியை அடைந்தவர்கள்


ராகேஷ் ஷர்மா


கல்பனா சாவ்லா

### பளு தூக்கும் வீரர்கள்


மல்லேஸ்வரி



ஜெரிமி

### சிகரம் தொட்டவர்கள்


ஹிலாரி, நார்கே


பச்சேந்திரி பால்


### சமையல் கலைஞர்கள்



மஸ்தானம்மா


தாமோதரன்


ஆணின் வேலைகள், பெண்ணின் வேலைகள் என்று தனித்தனியே உள்ளனவா?


## படத்திற்குரிய செயலை எழுதுக







பாடுகிறாள்









# 4. நாங்கள் நண்பர்கள்

KXVNNW

## ஆதி



நடனம் ஆடப் பிடிக்கும்.

நாய்க்குட்டி வளர்க்கிறான். அதனுடன் விளையாடி மகிழ்வான்.

திரைப்படம் பார்ப்பதில் ஆர்வம் அதிகம்.

தான் போகும் திசையில் நிலாவும் வருவதாகக் கூறுவான். அதைப் பார்த்தபடி அங்குமிங்கும் ஓடுவான்.

பழங்களை விரும்பிச் சாப்பிடுவான்.

எளிதில் கோபப்படுவான்.

## தமிழினி



எந்தப் புதிருக்கும் எளிதில் விடை சொல்வாள்.

மீன்கள் வளர்க்கிறாள். அவை நீந்துவதைப் பார்த்து மகிழ்வாள்.

புதிர்க் கதைகளை விரும்பிப் படிப்பாள்.

இரவில் நட்சத்திரங்களை எண்ணுவது பிடிக்கும்.

முட்டையும் மீனும் விருப்பமான உணவு.


தயக்கமின்றித் தெளிவாகப் பேசுவாள். பயப்பட மாட்டாள்.




இவர்கள் மூவரும் நண்பர்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள்.

உங்கள் நண்பர்களைப் பற்றி நீங்களும் கூறலாமே!

புதியவர் யாரேனும் பிடித்த பொருளைக் கொடுத்து தன்னுடன் வருமாறு அழைத்தால்...




இந்தச் சூழலில் நீ என்ன செய்வாய்?



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 17 21-10-2019 17:32:24

# பயிற்சி

## படித்துப்பழகுக

புதிர்க்கதைகள்

படக்கதைகள் நண்பர்கள் உருவங்கள்

வண்ணப்பூக்கள் மேகங்கள்

## எழுதிப் பழகுக

புதிர்க்கதைகள்

ஆர்வம் நட்சத்திரங்கள் இனிப்புப் பண்டம்

பூச்செடிகள் திரைப்படம்

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. ஜெரினுக்கு வம்புப் பேச்சுகள் பிடிக்கும். ▢
2. ஆதிக்குத் திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் அதிகம். ▢
3. தமிழினி தயக்கமின்றிப் பேசுவாள். ▢
4. ஜெரின், ஆதி, தமிழினி மூவரும் உடன்பிறந்தவர்கள். ▢

## வாய்மொழியாக விடை கூறுக

1. ஆதிரை, ஜெரின், தமிழினி – இவர்களிடம் உனக்குப் பிடித்தவை என்னென்ன?

W5MZA5

## விடை எழுதுக

1. நண்பர்கள் மூவரில் உனக்குப் பிடித்தவர் யார்? ஏன்?

தமிழினி இந்தப் புதிருக்கு விடை கண்டுபிடித்துவிட்டாள். நீங்களும் கண்டுபிடித்துப் பொருத்துங்கள்

| | |
|---|---|
| தட... தட... |  |
| டிரிங்... டிரிங்... |  |
| பாம்... பாம்... |  |
| பட்... பட்... |  |


எந்த எழுத்தை ஆதியிடம் கூறினாலும் உடனடியாக அந்த எழுத்தில் தொடங்கும் பல சொற்களைச் சொல்லிவிடுவான். நீங்களும் விளையாடி மகிழுங்கள்

க

கண்
கடல்
கப்பல்
கடை
கழுகு
கண்ணாடி
கரும்பு ....
.......



இந்தப் பூனைகள் ஜெரின் வரைந்தவை. உங்களுக்குப் பிடித்ததை நீங்களும் வரையுங்கள்





2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 19 21-10-2019 17:32:36

# 5. பயணம்

குட்டிப் பையன் சிட்டி குளிக்கப் போனான். குழாயைத் திறந்தான். தண்ணீர் குபு...குபுவென வந்தது.



'குளிக்கப் போறேன் – நான்
குளிக்கப் போறேன்
அழுக்குப்போக நல்லா
குளிக்கப் போறேன்'

EK2EAM

எனப் பாட்டுப் பாடியபடி வழலைக் கட்டியைக் குழைத்தான்.

'குமிழி வந்தேன்
வண்ணக்குமிழி வந்தேன்
சிட்டியின் கைகளில்
குமிழி வந்தேன்'



சிட்டியின் கையிலிருந்து பாட்டுச் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் தன் கையைப் பார்த்தான். கை, கால்கள் முளைத்த வண்ணக்குமிழி ஒன்று அவன் கையில் இருந்தது. சிட்டியைப் பார்த்துக் குதூகலமாகச் சிரித்தது. அதனைத் தொட்டுப் பார்க்க ஆர்வத்துடன் விரலை நீட்டினான். "ஆ! நீ தொட்டால் நான் உடைந்து விடுவேனே", என்றது குமிழி. சிட்டி சிரித்தபடி தலையை ஆட்டினான்.

மெல்ல, தன் முகத்தைத் தேய்த்தான். குமிழி, சிட்டியின் நெற்றியில் நடந்தபடி,



'நடந்து வந்தேன் – நான்
நடந்து வந்தேன்
சிட்டியின் நெற்றியில்
நடந்து வந்தேன்'
என்று பாடியது.



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 20 21-10-2019 17:32:37

பாடலைக் கேட்டுப் புன்னகைத்தான் சிட்டி. மீண்டும் தேய்க்கத் தொடங்கினான்.

'சறுக்கி வந்தேன் – நான்
சறுக்கி வந்தேன்
சிட்டியின் மூக்கின்மேல்
சறுக்கி வந்தேன்'



என்று பாடியபடி சறுக்கியது குமிழி. சிட்டி அதன் குறும்பைக் கண்டு மகிழ்ந்தான். தன் காதுகளைத் தேய்க்கத் தொடங்கினான். குமிழி, காதுகளில் வளைந்தபடி,



'வளைந்து வந்தேன் – நான்
வளைந்து வந்தேன்
சிட்டியின் காதுகளில்
வளைந்து வந்தேன்'
என்று பாடியது.

"ஏய்! காதுகளில் இவ்வளவு சத்தமாய்ப் பாடாதே", செல்லமாய் அதட்டினான் சிட்டி. 'ஓ! சரி, நண்பனே!' புன்னகையுடன் தலையாட்டியது குமிழி.

தன் தோள்களைத் தேய்த்தான் சிட்டி. குமிழி, சரசரவென்று வழுக்கியபடி,

'வழுக்கி வந்தேன் – நான்
வழுக்கி வந்தேன்
சிட்டியின் தோள்களில்
வழுக்கி வந்தேன்'
என்று பாடியது.



கலகலவெனச் சிரித்தபடி சிட்டி வயிற்றின்மீது தேய்த்தான். கடகடவென உருண்ட குமிழி,



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 21 21-10-2019 17:32:38




'உருண்டு வந்தேன் – நான்
உருண்டு வந்தேன்
சிட்டியின் வயிற்றின்மேல்
உருண்டு வந்தேன்'
என்று பாடியது.

ஓரக்கண்ணால் பார்த்தபடி தன் கால்களைத் தேய்த்தான் சிட்டி. அவன் குட்டிக் கால்களில் குடுகுடுவென ஓடிவந்த குமிழி,

'ஓடி வந்தேன் – நான்
ஓடி வந்தேன்
சிட்டியின் கால்களில்
ஓடி வந்தேன்'
என்று பாடியது.



தேய்த்து முடித்ததும் தண்ணீரைத் தன்மீது ஊற்றினான் சிட்டி.



அப்போது குமிழி,

'பயணம் வந்தேன் – நான்
பயணம் வந்தேன்
தலைமுதல் கால்வரை
பயணம்வந்தேன் – சிட்டியின்
தலைமுதல் கால்வரை
பயணம் வந்தேன்'

என்று பாடியபடியே
சிட்டிக்குக் கையசைத்தது.

"நாளையும் நீ வரவேண்டும்" என்று அன்புக் கட்டளையிட்டுக் கையசைத்தான், சிட்டி.

# பயிற்சி

## படித்துப்பழகுக

வழுக்கி வந்தேன் | வளைந்து வந்தேன்

உருண்டு வந்தேன் | சறுக்கி வந்தேன்

ஓடி வந்தேன் | நடந்து வந்தேன்

## எழுதிப் பழகுக

வண்ணக்குமிழி

வழலைக்கட்டி | குட்டிப்பையன்

பாட்டுச்சத்தம் | பயணம்

## பொருத்துக

வண்ணக்குமிழி,

| | | | |
|---|---|---|---|
| 1. | மூக்கில் | – | வழுக்கி வந்தது |
| 2. | காதில் | – | வளைந்து வந்தது |
| 3. | தோளில் | – | ஓடி வந்தது |
| 4. | காலில் | – | சறுக்கி வந்தது |

WJWY9T

## வாய்மொழியாக விடை கூறுக

1. வண்ணக்குமிழி எவ்வாறெல்லாம் பயணம் சென்றது?

## விடை எழுதுக

1. வண்ணக்குமிழி எங்கெங்கே பயணம் செய்தது?



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 23 21-10-2019 17:32:53

குமிழி சிட்டியின் முதுகில் இருக்கிறது. என்ன பாடியிருக்கும்? எழுதுக.

.................................................................

.................................................................

.................................................................

.................................................................



ஒரு எழுத்தை நீக்கினால் உடல் உறுப்பு கிடைக்கும். கண்டுபிடித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| தவலை | | புகை | |
| கவண் | | நகரம் | |
| பகல் | | காவல் | |

**என் பாதுகாப்பு! என் கையில்!**

- சத்தான உணவை உண்பேன்.
- நாள்தோறும் குளிப்பேன். சுத்தமாக இருப்பேன்.
- சாலையில் கவனமாகச் செல்வேன்.
- ஆபத்து தரும் செயல்களைச் செய்யமாட்டேன்.
- என்னை எவரும் தவறாகத்தொட விடமாட்டேன்.
- அன்றாடம் நடப்பதைப் பெற்றோரிடம் கூறுவேன்.



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 24 21-10-2019 17:32:54




# 6. கடற்கரைக்குப் போகலாம்

கடற்கரைக்குப் போகலாம்
மணலில் வீடு கட்டலாம்
கிளிஞ்சல் சங்கு பொறுக்கலாம்
கட்டும் வீட்டில் ஒட்டலாம்

பந்தைத் தட்டி அடிக்கலாம்
நண்டைத் துரத்தி ஓடலாம்
பட்டம் விட்டுப் பார்க்கலாம்
குட்டிக்கரணம் போடலாம்

ஈர மணலில் எழுதலாம்
அழிக்கும் அலையைத் துரத்தலாம்
துள்ளித்துள்ளிக் குதிக்கலாம்
தண்ணீரிலே நனையலாம்

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 25 21-10-2019 17:32:55

# பயிற்சி

## ஒலித்துப்பழகுக

கட்டலாம் | பொறுக்கலாம்

ஒட்டலாம் | ஓடலாம் | எழுதலாம்

குதிக்கலாம் | நனையலாம் | துரத்தலாம்

## படித்தும் எழுதியும் பழகுக

கடற்கரை | கிளிஞ்சல்

குட்டிக்கரணம் | ஈரமணல் | அலை

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | மணலில் வீடு | – | எழுதலாம் |
| 2. | அலையைத் | – | அடிக்கலாம் |
| 3. | பந்தைத் தட்டி | – | துரத்தலாம் |
| 4. | நண்டைத் துரத்தி | – | கட்டலாம் |
| 5. | ஈர மணலில் | – | ஓடலாம் |

7RP9V2

## கலந்துரையாடுக


கடற்கரைக்குச் சென்றால் என்னென்ன செய்யலாம்.

## இந்த இடங்களுக்குச் சென்றால் என்னவெல்லாம் செய்வீர்கள்?







## வண்ணம் தீட்டுக



# 7.தொடர்வண்டி நிலையத்தில்

LD5MNK






- படத்தைப் பார்த்துப் பேசுக
- சிறுசிறு தொடர்களை உருவாக்குக



2nd Std CBSE Tamil_Unit 1_Term_III.indd 29 21-10-2019 17:33:04

## வினா கேட்கலாம்



1. எத்தனை மரங்கள் உள்ளன?
2. முயல் என்ன செய்கிறது?
3. நரி யாரைத் துரத்துகிறது?

நீங்களும் வினாக்களைக் கேளுங்கள்.

8784WD

______________________________________________________

______________________________________________________